A84189
501

# திருக்குறள் - ஒரு உலக இலக்கியம்

**நீதிபதி மகராசன்**
அறக்கட்டளைச் சொற்பொழிவு

REGISTRAR OF BOOKS
INFORMATION

சொற்பொழிவாளர்
**ச. மோகன்**
தலைமை நீதிபதி, உயர்நீதிமன்றம், சென்னை

நாள்
4—3—1989
முற்பகல் மணி : 11-00

**தமிழ்ப் பல்கலைக்கழகம்**
**தஞ்சாவூர்**

ISBN—81—7090—126—X

133043
சென்னை-600 008

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 107

திருவள்ளுவர் ஆண்டு 2020 மாசி — மார்ச்சு 1989

நூல் : திருக்குறள் - ஒரு உலக இலக்கியம்

ஆசிரியர் : ச. மோகன்

பதிப்பு : முதற்பதிப்பு

விலை : உரூ. 3-00

அச்சு : மீரா அச்சகம்
6, கணேஷ்நகர் 4ஆம் வீதி
புதுக்கோட்டை 622 001

# திருக்குறள் - ஒரு உலக இலக்கியம்

உயர் நீதிபதி அமரர் மகராஜன் அவர்களுடைய நினைவுச் சொற்பொழிவை ஆற்றுவதில் நான் மிகவும் பெருமை கொள்கின்றேன். ஏனெனில், அவர் நல்லதொரு நீதிபதியாக மட்டுமன்றி, ஒரு சிறந்த இலக்கியவாதியாகவும் இருந்தார். அவர்களுக்குப் பல நூல்களிலே விருப்பம் இருந்தாலும், திருக்குறளிலே ஒரு மாறாத காதல் கொண்டிருந்தார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. ஏனெனில், இந்திய இலக்கியக் கர்த்தாக்களில் திருவள்ளுவர் தலைசிறந்தவர் என்ற எண்ணத்தைக் கொண்டது மட்டுமல்லாமல், அதை எழுத்து வடிவமாக, ஒரு நூலாக வெளியிட்டு இருக்கின்றார்கள். நூலாக என்றால், தமிழிலே எழுதினால் சிலருக்குத்தான் பயன்படும் என்ற நோக்கத்தோடு, ஆங்கிலத்திலே குறளின் பெருமையை, வள்ளுவரின் அறிவுக் கூர்மையை மிக அழகாக வடித்திருக்கின்றார்கள். என்ன காரணமெனில், ஆங்கிலம் உலக மொழி.

நம்முடைய தமிழ் இலக்கியங்களிலே இருக்கின்ற ஒரு சிறந்த நூல், காலத்தால் அழிக்க முடியாத நூல், கல் இருக்கின்ற வரை, மண் இருக்கின்ற வரை, வான் இருக்கின்ற வரை, ஞாயிறு இருக்கின்ற வரை, திங்கள் இருக்கின்ற வரை, ஒரு நூல் இருக்குமானால், அது திருக்குறள்தான். அந்தத் திருக்குறளின் சிறந்த கருத்துக்களை உலகோர் அனைவருக்கும் அறிவித்தல் வேண்டும்; அதற்கு ஆங்கிலம் சிறந்த கருவியாகும் என்ற முறையிலே எழுதியிருக்கின்றார்கள். ஏனென்றால்,

திருக்குறள் ஒரு உலக இலக்கியம்;
திருக்குறள் ஒரு வாழ்க்கை நூல்;
திருக்குறள் எந்நாட்டவரும் ஏற்றுக் கொள்கிற நூல்;
திருக்குறள் எச்சமூகத்தவரும் ஒப்புக் கொள்கிற நூல்;
திருக்குறள் எச்சமயத்தினரும் விரும்பும் நூல்;

திருக்குறள் எவ்வினத்தவரும் ஏற்கும் நூல்;
திருக்குறள் ஒப்புயர்வில்லாத அரும்பெரும் நூல்;

இவ்வுலக வாழ்க்கை செம்மையாக அமைவதற்கும், அச்செம்மை வாழ்வு நம் முயற்சியாலேதான் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை உணர்த்திக் காட்டுவதில் ஈடும் இணையும் இல்லாத ஒரு தனி நூல் திருக்குறள். அதன் சிறப்பினைப் பல்வேறு மொழியினரும், பல நாட்டவரும், பல சமயத்தினரும், பல இனத்தினரும் போற்றி வந்திருக்கின்றார்கள்; இன்னும் போற்றிக்கொண்டே இருப்பார்கள். ஆகவேதான், டாக்டர் வின்டெர்னிட்ஸ் என்கின்ற பேரறிஞர் சொல்கின்ற பொழுது; ''சாதிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு பிரிவுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு நிற்கின்றார் திருவள்ளுவர். அவர் சொல்கின்ற கருத்துக்கள் மனித ஒழுக்கத்திற்கும், நுண் அறிவிற்கும் வழிகாட்டியாகத் திகழ்கின்றன. அந்த ஒரே ஒரு காரணத்தினாலேதான் குறளை அநேக மக்கள் படிப்பது மட்டுமன்றி, அதன் உட்கருத்துக்களைக் கற்றறிந்த பின், புகழுரையாகப் பற்பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சொல்லியிருக்கின்றார்கள். ஏதோ அவர் பிறந்த மண்ணில் மட்டுமல்ல அவர்களுக்கு அவ்வாறு புகழாரம் கிட்டியது; ஆனால், மேலை நாட்டினர் கூட, திருக்குறளை அறிந்த நாள் முதற்கொண்டு அதற்குரிய புகழைக் கொடுக்கத் தவறியதில்லை.

He (Tiruvalluvar) stands above all races, castes and sects and What he teaches is a general human morality and wisdom. No wonder that the Kural has not only been much read, studied and highly praised in the land of its origin for centuries, but has also found many admirers in the West, ever since it has become known.

—Dr. M. Winternitz

இதற்கு மேலாக, சிங்கன் என்கிற அறிஞர் கூறுகின்ற பொழுது, உலக இலக்கியங்களிலே தலை சிறந்த இடத்தை வகிக்கின்றது குறள். ''கன்பூஷியஸ் கருத்துக்களுக்கு ஒப்பாக, ப்ளாட்டோ உரையாடல்களுக்கு ஒப்பாக, அரிஸ்டாட்டில் ஒழுக்க முறைக்கு ஒப்பாக, சினேகா அவர்களின் எழுத்துக்கு ஒப்பாக; உலகத்தின் மாபெரும் நூற்களின் வரிசையில் திருக்குறள் வைக்கப்படவேண்டும்.

தமிழினம் உலக அறிவு இலக்கியத்திற்குத் தந்த அழகான நூல் திருக்குறள்.

This book occupies in the literature of the world, a place comparable to Confucian Analects, Plato's, Dialogues, Aristotle's Ethics and Seneca's writings. The Thirukkural belongs to the great books of the world, and it is the Tamil's contribution to the Wisdom Literature of the World.

யாருடைய நினைவை நிலைநாட்ட இன்று சொற்பொழிவு ஆற்றப்படுகின்றதோ, நீதிபதி அமரர் மகாராஜன் அவர்களே அழகாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள், உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான நூல் திருக்குறள் என்று. அவர்கள் கூறுகின்றார்கள்; ''தமிழர்கள் மனித சமுதாயத்தின் பண்பாட்டிற்கும், முன்னேற்றத்திற்கும் முன்னோடியாக இருந்தார்கள் என்று சொல்கின்றபொழுது ஏதோ தற்பெருமைக்காகச் சொல்லவில்லை. வரலாற்று உண்மையைத்தான் கூறுகின்றார்கள். ஏனென்றால், உலக மனிதனுக்கு ஒரு அழியாத கருவூலத்தைத் தந்தவர்கள் ஆவார்கள், திருக்குறளின் வாயிலாகப் பற்பல நூற்றாண்டுகளாகப் பண்டைத் தமிழர் பல பண்பாட்டுக்களோடு கலந்து வாழ்ந்திருக்கின்றார்கள். ஆகவேதான், பல பண்பாடுகள் கலந்து, பல இனங்களோடு சேர்ந்திருந்தார்கள். அப்படி இருந்தும், திருவள்ளுவர் ஒருவரால்தான் முடிந்தது, உலக சமுதாயம் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சிறந்த கருத்தை, அதாவது 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற கருத்தை, அந்தச் சிறந்த அறிஞரால்தான் கொடுக்க முடிந்தது. தமிழர்களுடைய வாழ்க்கை காலத்தை வென்ற நூலான திருக்குறள் படம் பிடித்துக் காட்டுவது போல், உலக உண்மைகளை எடுத்துக் காட்டும் முறையிலே இருக்கின்றது''.

This Claim that the Tamils were undoubtedly in the vanguard of human progress and civilisation, is made not in any self adulation or out of vanity. It is done merely to mention the facts of history which serve as a back ground to introduce an immortal bard of Universal man, Thiruvalluvar, in the correct perspective. Over the centuries the ancient culture of the Tamils was subjected to an aggressive impact of other cultures from far and near, with the result a synthetic

culture had been evolved, which had come to stay in the country. This was, indeed, inevitable when there was a fusion of races and a mingling of cultures. However, it was given to a Tamil Poet, Valluvar to present the lofty heritage of his ancient land in a manner acceptable to men of all ages informed by the spirit of free enquiry. The way of life of the Tamils as enshrined in his immortal work the Kural, is based on the universal truths.

ஒரு காலத்துச் சிறந்த இலக்கியம் மறுகாலத்து வழக்கத்தில் இல்லை; ஒரு காலத்தில் புகழ்பெற்ற அறிஞன், காலப்போக்கில் நம் நினைவிலிருந்து மறைகிறான், கால மாற்றம் கருத்து மாற்றத்தை வரவேற்கிறது. உருண்டு ஓடிச் சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளின் வரலாற்றினை எண்ணிப் பார்த்தால், எத்தனை நிகழ்வுகள்! எத்தனைக் கடல் கோள்கள்! எத்தனை அழிவுகள்! எத்தனைப் புதிய நாடுகள்! அரசுகள்! மொழி அழிவுகள்! மொழித் தோற்றங்கள்! நாகரிகப் பிறப்பு, நாகரிகக் கலப்பு! பழைய உயிரின அழிவு! புதிய உயிரினப் பிறப்பு! எத்தனை உலகக் கண்டுபிடிப்புகள்! கருத்து மலர்ச்சி! கருத்துப் புரட்சி! சமயப் பிறப்பு! சமயக் காழ்ப்பு! காலப் பெருவெளியில் கலந்த அறிஞர்கள் எத்துணையோ பேர்! மறைந்துபோன எத்தனையோ இலக்கியங்கள்! இவ்வளவு நிலையிலும் திருக்குறள் காலங்கடந்த பெருநூலாக, அறிவின் வற்றாத ஊற்றாக விளங்கி வருவதே இதன் தனித்தன்மைக்கு எடுத்துக்காட்டு. இந்நூலைப் படைத்த பேரறிஞ னின் சிறப்புத்தான் நம்மை சிலிர்க்க வைக்கிறது.

அந்த எடுத்துக்காட்டுக்களை இங்கே எடுத்துக் காட்டுவதுதான் என்னுடைய பணி.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினுள் தலை சிறந்தது அறம். ஏனென்றால், மற்ற மூன்றிற்கும் அதுவே மூலமாக அமைகின்றது. வள்ளுவர் வகுக்கின்ற சமுதாயம் அறத்தின் அடிப் படையிலே இருக்க வேண்டும் என்கின்ற முறையிலே அமைந் துள்ளது. அறம்தான் ஒழுக்கத்திற்கு வித்தாகின்றது. அறத்தை வளர்த்து, மறத்தைத் தவிர்ப்பதுதான் வாழ்வு. எந்த ஒரு நாடு அறத்தினை வளர்க்காது இருக்கின்றதோ, அந்த நாடு கெடும்; சமுதாயம் கெடும். வாழ்வு நலமாய் அமைய அறம் இன்றியமை

யாதது. அப்படி அறத்தை வலியுறுத்தி, வள்ளுவர் கூறுகின்றார், இரண்டு குறள்கள் மூலமாக, அறம் என்பது என்ன என்பதை.

''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற''

யாருடைய மனம் மாசின்றி இருக்கின்றதோ, தூய்மையாக இருக்கின்றதோ, அவர்கள்தான் அறத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் தான் அறத்தைப் பேணி வளர்க்க முடியும். மனத்திலே மாசை வைத்துக் கொண்டு, 'நான் அறம் புரிகிறேன்' என்று சொன்னால், அது தரம் குறைந்தவர் பேச்சாகத்தான் இருக்கும். அந்த அறம் ஆரவாரச் செயலாகும். இந்தக் கருத்து பைபிளிலே எதிரொலிக்கின்றது. மேலை நாட்டு எழுத்துக்களிலெல்லாம் எதிரொலிக்கின்றது.

"Blessed are the pure in heart
for they shall see God" —The Bible

"What, what is virtue but repose of mind
A pure ethereal calm that knows no storm''- Thomson

1330 அருங்குறட்பாக்களில் தலையாய குறள் இது. ஏனென்றால் உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும் என்பது எந்த ஒரு தனிப்பட்ட சமுதாயத்தினரின் நெறியல்ல. உலகம் அனைத்தும் விரும்பி ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாகும்.

இந்த மாசுக்கள்தான் என்ன என்பதை வள்ளுவர் மிக அழுத்தந் திருத்தமாகச் சொல்கின்றார்.

''அழுக்காறு, அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்''

பொறாமையும், ஆசையும், கோபமும் வன்சொல்லும் நெஞ்சினைப் பெரிதும் மாசுபடுத்தி விடுகின்றன என்ற அரும்பாடத்தைப் பண்பில் உயர்ந்தோர் புரியும் அறத்தின் நலத்திற்கென வள்ளுவர் புகழ்கின்றார். 'ஒருவன் அறம் புரிகிறான், ஆதலால் அவனை உலகம் புகழ்கிறது' என்ற பொறாமையால் ஒருவன் அறம் புரிகிறான். 'அவனை உலகம் புகழ்கிறது. அந்தப் புகழ் எனக்கும் வேண்டும்'

என்ற ஆசையால் ஒருவன் அறம் புரிகிறான். 'என் பகைவன் அறம் புரிகிறானே' என வெகுண்டு கொண்டு, ஒருவன் அறம் புரியலாம். வாழ்வு என்ன என்பது அறியா மனிதர்களே, பொருள் ஈட்டத்தெரியாத அறிவற்றவர்களே, எனக்கு முன்பு தீங்கிழைத்தவர் களே', என இன்னாச் சொல் வழங்கிக் கொண்டே ஒருவன் அறம் புரியலாம். இத்தகைய பொறாமை, ஆசை, கோபம், இன்னாச் சொல் கொண்டவரும் அறம் புரியலாம். அதனால் நலமுண்டு. ஆனால் அறத்தில், அருளில், பண்பில், அறிவில் உயர்ந்து நிற்போர் இந்நான்கு குற்றங்களுக்கு ஆட்படாது அறம் புரிய வேண்டும் என்கிறார் வள்ளுவர். அறத்தின் தன்மை மேன்மேலும் உயர்ந்து, உயர்ந்து அறம் மாண்புறுவதற்கு இவ்வாறு வள்ளுவர் கூறுகிறார். இவ்வாறு அறத்தை வளர்த்து அறத்தை மாண்புறச் செய்வோரே இறுதியில் அந்த அறத்தின் பயனைச் செம்மையாகப் பெறுவர்.

இந்த அறத்தை அன்றே செய்திடுதல் வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றார், அதை இறுதிவரை தள்ளிப் போடுதல் கூடாது. நாம் செய்கின்ற அறம் இன்ப வாழ்க்கைக்கு உறுதுணை யாக இருக்கும்.

உடம்பினால் உழைத்து, பிறர்க்கு நன்மைகளைச் செய்து, உலகுக்கு உதவுவதே, ''அரும் பெறல் யாக்கையினை''ப் பெற்ற பெரும் பயன் என்கிறது நாலடியார். இந்த நற்பயன்தான் உடம்பு என்ற கரும்பிலிருந்து நாம் எடுக்கும் சாறு ஆகும். இந்தச் சாற்றினை எடுக்கத் தவறிவிட்டோமானால், நம் உடம்பு நாளடைவில் சாறு வற்றிய கரும்பு போல் ஆகிவிடும்!

''Life is real ! Life is earnest !
And the grave is not its goal''

என்று பாடுகின்றார் Longfellow என்ற ஆங்கிலக் கவிஞர்.

''வாழ்வு உண்மையானது, உற்ற முயற்சியுடையது.
அதன் குறிக்கோள் கல்லறை அல்ல''

என்கிறார் அந்தக் கவிஞர்.

ஏதோ பிறந்தோம், வளர்ந்தோம், சென்றோம் என்று இல்லாமல் பெரும் புகழ் பெற்றோம். பேராற்றல் வளர்த்தோம், புகழுடம்புடன் சென்றோம் என்ற நிலையினை நாம் எய்தல் வேண்டும். இதுவே நாம் பெறுதற்கரிய யாக்கையைப் பெற்ற பயன். இல்லையெனில் கரும்பின் சாறுபோன சக்கையைப் போன்றதாகிவிடும் நம் உடம்பு என்கிறது நாலடியார் நன்னெறிப் பாடல்.

இதோ அப்பாடல்,

> ''அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்
> பெரும்பயனும் ஆற்றவே கொள்க; - கரும்பூர்ந்த
> சாறுபோல் சாலவும் பின் உதவி மற்றதன்
> கோதுபோல் போகும் உடம்பு''

அரிது, அரிது மானிடராகப் பிறத்தல் அரிது இந்த அரிய பிறவியில் சிறப்புடைய பெரும் பயனுடைய அறச்செயல்களைப் புரியவேண்டும். நற்செயல்களில் உடம்பைச் சாறுபோல் பிழிய வேண்டும். அறவழிகளில் நல்ல உழைப்பெடுத்துக் கொள்ள வேண்டும். ஆலைக்காரனுக்குக் கரும்பு அவன் பின் உதவிக்காகச் சாறு கொடுத்து, தான் சக்கையாய்க் கழிந்தது—அதுபோன்று அற முடையானுக்கு இப்பெரும் பயனுள்ள செயல்கள் மிகவும் உதவும்.

> தீயவை தீய பயத்தலால் தீயவை
> தீயினும் அஞ்சப் படும். (குறள்)

எனவே, அத் தீயவை நீக்கி, அறம் செய விரும்பு, அறம் பூணார் பழி பூண்பர்—அறம் புரிதலே பிறவிப் பயன். இவ்வறத்தால் நீங்காத புகழ் சேரும். மக்கள் இதயத்தில் என்றும் நிலைப்பர். ஆங்கிலத்தில் கூற வேண்டுமென்றால்,

''Carve your name on hearts, not on marbles.''

உடம்பை வருத்தாமல், உழைக்காமல், எவரும் உயர்தல் முடியாது. உழைப்புத்தான் உயர்வு.

அழிந்துபோகக் கூடிய உடம்பு, மண்ணோடு மண்ணாகப் போகும் உடல் என்றெல்லாம் உடலைக் குறைத்துப் பேசினாலும்,

உடம்பு இன்றி நம்மால் எந்தச் செயலையும் செய்தல் இயலாது. ஆதலால்தான்,

''உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே''

என்கிறார் திருமூலர்.

''If anything is sacred,
the human body is sacred''

என்று பாடுகின்றார் வால்ட் விட்மன் (Walt Whitman) என்ற அமெரிக்க நாட்டுக் கவிஞர்.

நம் உடல் புனிதமானது. நம் வாழ்வின் பயனை எய்துவதற்கு அதுவே உற்ற கருவியாகவும் உயர்ந்த சாதனமாகவும் விளங்குகிறது.

இந்த உடம்பினைக் கரும்போடு ஒப்பிடுகின்றது நாலடியார். இனிப்பான சாறு கொண்டது அல்லவா கரும்பு! கரும்பைப் பிழிந்து தானே அதன் சாற்றில் இருந்து சர்க்கரையை எடுக்கிறோம். இது போன்றே உங்கள் உடம்பையும் உழைப்பால் பிழியுங்கள், வாழ்வின் பயன் என்ற சர்க்கரையை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறுகின்றார், ஆசிரியர்.

சாறு எடுக்கப்பட்டபின் மிஞ்சும் கரும்புச் சக்கையினை எரித்து விடுவார்கள். இதுபோல் நம் உடம்பும் ஒரு காலத்தில் தீக்கிரையாகின்றது. சாறு எடுத்தபின் மிஞ்சுகின்ற கரும்புச் சக்கையை—அந்த கரும்பு பின் துரும்பாகித் தீயில் எரிபடும் போது யாரும் கவலைப் படுவதில்லை. ஏனென்றால் அச்சக்கை பயனற்ற பொருள். அது போல், நம் உடல் தீக்கிரையாகும் போது வருந்தாமல் இருக்க வேண்டுமெனில், அவ்வுடலைப் பிழிந்து வாழ்க்கைப்பயன் என்ற சாறு எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். நற்செயல்களில் உழைத்து உடம்பாலான அறப்பயனைப் பெற்றவர் இறப்பு வருங்காலை, தன் உடம்பின் கேடு நினைத்து வேதனைப் படார். சாவைச் சந்திக்க அஞ்சமாட்டார். கவிக்குயில் சரோஜினி நாயுடு சொல்வது போல்,

''Welcome, O, Tranquil Death
Thou hast no ills to grieve me''

என்றுகூடக் கூற முற்படுவர். ஆதலால், உடல் தீக்கிரையாவதற்கு முன் உழைத்து உழைத்து, உடலைப் பிழிந்து வாழ்வின் பயனைப் பெறுங்கள், அறத்தினைப் புரியுங்கள் என்று கூறுகிறது நாலடியார்.

> ''கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
> துரும்பெழுந்து வேம்கால் துயராண் டுழவார்
> வருந்தி உடம்பின் பயன் கொண்டார் கூற்றம்
> வருங்கால் பரிவ திலர்.''

''கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்'' என்கிறது பாடல். ''சிறுகாலை'' என்றால் காலை வேளை. நம் வாழ்விலே காலை வேளையான இளமையிலேயே இடைவிடாது உழைக்க வேண்டும் என்பதைச் சுட்டுகிறது பாடல்.

> ''Blessed is he, who has found his work,
> Let him ask no other blessedness''

என்கிறார் கார்லைல் (Carlyle) என்ற ஆங்கிலேய அறிஞர்.

உழைப்பே ஒருவனுக்கு உற்ற நன்மை ஆகும்; அதை விடச் சிறந்த நலன் எதுவுமில்லை என்பது ஆன்றோர் கண்ட உண்மை.

கரும்பின் பயன் அதைப் பிழிந்து சாறு எடுப்பதுதான்; அது போல் உடம்பின் பயன் உழைத்துப் பெறும் பயன்தான். எனவே உடலைக் கரும்போடு ஒப்பிடுவது உணரத்தக்கது.

கரும்பு போன்ற உடலால் கரும்புச்சாறு போன்ற வாழ்வு நலனை உழைத்துப் பெறுதல் வேண்டும் என்ற பாடலும் கரும்பாக இனிக்கிறது அல்லவா!

> 'அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
> புறத்த புகழும் இல'.

எந்தச் செயலால் இன்பம் பிறக்கிறதோ அது அறச் செயல். இன்பம் என்றால் தனக்கு இன்பம் தேடிக் கொள்வதல்ல. புகழ் தனக்கு வரும் வகையில் அந்த இன்பச் செயல் இருத்தல் வேண்டும். அப்படியெனில் அந்த இன்பம் பிறருக்கு ஏற்படவேண்டும். பிற மக்களுக்கு இன்பம் பிறந்தால்தானே, அந்த இன்பச் செயலைச்

செய்தவனுக்குப் புகழ் ஏற்படும்? எனவே, பிறருக்கு இன்பம் அளிக்கும் செயல்களைச் செய்தலே 'அறம்' என்பதாகும்.

இத்தகைய அறச் செயல்களைச் செய்பவன்தான் உண்மையில் நல்ல மனிதன் ஆகின்றான், புகழ் அடைகின்றான், போற்றப் பெறுகின்றான்.

''We toil for fame,
We live on crusts,
We make a name,
Then we are busts.

என்று பாடுகின்றார் ராபின்ஸ் (Robbins) என்ற ஆங்கிலக் கவிஞர்.

புகழுக்காகப் பாடுபடுகின்றோம், பெயரெடுக்கின்றோம், பின் மறைகின்றோம்.

பிறருக்கு இன்பம் நல்கி நாம் புகழ் பெறவேண்டுமெனில், நம்மால் இயன்றளவிற்கு நாம் பிறருக்கு உதவவேண்டும். இல்லை என்று கேட்போருக்கு நம்மால் இயன்றதைக் கொடுத்தல்வேண்டும். ஈதல் அறம், இன்னா செய்யாமை அறம், பகிர்ந்து உண்ணல் அறம். இது போன்ற எத்தனை எத்தனையோ செயல்களால் பிறருக்குற்ற துன்பத்தைப் போக்கலாம், அவருக்கு இன்பத்தைச் சேர்க்கலாம்.

''இத்தகைய அறச் செயல்களையெல்லாம் இப்பொழுதே செய்யவேண்டுமா?இன்னும் பல ஆண்டுகள் இருக்கப்போகிறோமே, இப்பொழுது என்ன அவசரம்?'' இவ்வாறாக நாம் எண்ணி, நம்மால் செய்யக்கூடிய பல அறச் செயல்களைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போகிறோம். இது எவ்வளவு தவறானது என்பதை எடுத்துக்காட்டுகிறது நாலடியார் பாடல்.

''இன்று, அன்று என நாம் நம் வாழ்க்கையின் இறுதியைக் கணிப்பது முடியாது. என்றுமே அந்த முடிவு வரலாம் என்ற உண்மையினை மறந்து விடாமல், தீய செயல்களை விலக்கி, நல்ல அறச்செயல்களை இயன்ற அளவு அவ்வப்பொழுது செய்து விடுங்கள்'' என்று அறிவுறுத்துகிறது நாலடியார்.

''இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையால்
மருவுமின் மாண்டார் அறம்.''

''Like the dew on the mountain
Like the foam on the river
Like the bubble on the fountain
Thou art gone, and for ever!

என்று இசைக்கின்றார் வால்டர் ஸ்காட் (Walter Scott) என்ற ஆங்கிலக் கவிஞர்.

''மலையில் படரும் பனிபோல், நதி நீரில் தோன்றும் நுரை போல், ஊற்றில் எழும் குமிழ்போல் மறைந்து போகின்றோம்'' என்ற ஆங்கிலக் கவிதை, நிலையாத வாழ்வினை நினைவுபடுத்தி, நல்லதைச் செய்க என்று நம்மைத் தூண்டுகிறது. இது போன்ற அருங்கருத்துக்களை எந்த மனித சமுதாயம்தான் ஏற்றுக் கொள்ள மறுக்க இயலும்?

வாய்மையைப் பற்றி மிகச் சிறந்த முறையிலே கூறுகின்றார் வள்ளுவர்.

''வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும்
தீமை இலாத சொலல்''

யாருக்கும் தீமையில்லாத முறையில் சொல்லும், செயலும் இருக்கு மானால் அது வாய்மை. பிறரைப் பற்றிக் கேடு பயக்கின்ற, தீமை பயக்கின்ற சொற்களைச் சொல்லுதல், செய்திகளைப் பரப்புதல் தவறு. நம்முடைய பகைமை உணர்ச்சியால் உந்தப்பட்டு அல்லது பொறாமையின் அடிப்படையில் நாம் மற்றவர்களைப் பற்றித் தீயவை பேசுதல் நம் இழி தன்மையைக் காட்டும். அதன் மூலம் துன்பத்தையும் துயரத்தையும் அதிகப்படுத்துவதுதான் நோக்கம். அச்செயலைத் தவிர்க்க வேண்டும். ஆகவே, தீமைபயக்காத சொற்களை மட்டுமே பேசவேண்டும் என்று கூறுகின்றார் வள்ளுவர்.

ஒருவன் பேச்சுரிமை தனக்கு இருக்கிறது என்ற அடிப்படையில் எது வேண்டுமானாலும் பேசுவது என்பது தகாத செயல். மெய்யே

பேச வேண்டும். அதுதான் வாழ்க்கைக்கு இன்பம் பயக்கும். அது தான் உயர்வு அளிக்கும். இந்த உண்மையை வளர்ப்பதற்கு உறுதுணையானதொரு கருவியைச் சொல்கின்றார் வள்ளுவர்.

> ''தன்நெஞ் சறிவது பொய்யற்க, பொய்த்தபின்
> தன்னெஞ்சே தன்னைச் சுடும்''

ஒருவரின் உண்மையான வாழ்விற்கு ஊன்றுகோல் தன்னுடைய மனச் சான்றேயாகும். உலகம் போற்றினாலும், தூற்றினாலும், அந்தப் போற்றுதலிலே சிறிதுகூட மயங்காமல், தூற்றுகின்ற பொழுது துவண்டு போகாமல் தன் மனச்சான்று ஒன்றையே துணை கொண்டு நிற்க வேண்டும். நல்லது எது, தீயது எது என்று தன்னுடைய உள்ளம் சொல்கின்ற வேளையில் அதன்படி நடத்தல் வேண்டும். நல்லவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும். தீயவற்றை தள்ளிவிடல் வேண்டும். இதற்கு மாறாக, எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை, தீயது என்றாலும் செய்வேன், தவறு என்றாலும், தவறு என்று மனச்சான்று உறுத்திய போதும், அந்த உறுத்தலை உதறித்தள்ளிவிட்டுச் செய்ய முற்பட்டால், தன்னுடைய உள்ளமே சுட்டெரித்துவிடும். ஆகவேதான் , தன் நெஞ்சு, தன் உள்ளம், தன் மனச்சான்று, எதைத் தவிர்க்கச் சொல்கின்றதோ, அதைத் தவிர்த்தாக வேண்டும்.

ஊழல் புரிவது குற்றம். அதுவும் மற்றவர்களுக்கு நீதி வழங்க முற்படும் நீதிமான்கள் இந்தப் பொன்நிகர் கொள்கையை வாழ்க்கைப் பாடமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். 'ஊழல் புரிந்து விட்டேன், ஊரை ஏமாற்றிக் கையூட்டு பெற்று விட்டேன், யாரும் காணாமல்' என்ற எண்ணத்திலே இருப்பார்களேயானால் அது தன்னையே ஏமாற்றிக் கொள்கின்ற செயலாகும். ஊழல் புரிந்தது உலகிற்குத் தெரியாமல் இருக்கலாம்; கையூட்டு பெற்றதைக் கண்டவர்கள் இல்லாமல் இருக்கலாம். ஆனாலும், தன்னுடைய உள்ளம், தன்னுடைய மனச்சான்று அவர் உறங்கப் போகும் வேளையில் உறுத்திக் காட்டி, ஒரு சில மணித்துளிகள் மனம் வேதனைப்பட்டால் அதுவே தவறிழைத்த நீதிபதிக்குத் தகுந்த தண்டனையாகும். எப்படி அவர் அமைதியான மனத்தோடு இருக்க முடியும்? ஊன் உறங்கினாலும், உள்ளம் உறங்காது உரைக்குமே! இந்த அழகான கருத்தை, ஷேக்ஸ்பியர் சொல்கின்ற பொழுது,

நம்மையறியாமலேயே வள்ளுவரின் சிறந்த அறிவை எண்ணி எண்ணிப் பெருமை படுகின்றோம்.

> "This above all,.........
> To thine own self be true,
> And it must follow, as the night the day,
> Thou canst not then be false to any man"

இப்படி உலகில் வாழ்ந்தால் என்ன நடக்கும்? உலகத்து மக்கள் எப்படி அவரை மதிப்பிடுவார்கள் என்பதை வள்ளுவர் மிக்க நயமாக உரைக்கின்றார்.

> " உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
> உள்ளத்து ளெல்லாம் உளன்"

யார் உண்மை வழி நடக்கின்றார்களோ; யார் சத்திய சோதனை மேற்கொள்கின்றார்களோ, அவர்கள் உலகத்து மக்கள் அனைவருடைய பாராட்டுதலையும், போற்றுதலையும் பெறுவர்; நம்மிடையே வாழ்ந்த மகாத்மா காந்தி அவர்கள் இந்தக் குறளுக்குச் சிறந்த மேற்கோளாக வாழ்ந்தவர். தன்னுடைய வாழ்க்கையின் வழிகாட்டி உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை என்று உறுதியாக நம்பினார். ஊமையராய், குருடர்களாய், செவிடர்களாய் இருந்த நம்மையெல்லாம், மனிதர்களாய், பண்புள்ளவர்களாய், விடுதலை வேட்கையுள்ளவர்களாய் ஆக்கிய பெருமை காந்தியடிகளையே சாரும். ரத்தமின்றி, யுத்தமின்றி, உண்மையை உறுதுணையாகக் கொண்டு, ஆயுதமாகக் கொண்டு, தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, நலிந்த பாரதத்திற்கு விடுதலை வாங்கித் தந்தார். வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த நாயகன் இந்நாட்டில் மட்டுமன்றி, வையம் முழுவதும் வாழ்கின்றார்.

இந்த அரும் பெரும் கருத்துக்களை உலகம் எப்படி ஏற்கத் தயங்கும்?

திருக்குறளில் முழுவதும் வலியுறுத்திக் கூறப்பெறுவது தூய நல்லொழுக்கமே. திருவள்ளுவர் தாம் கூறும் அறத்தை 'ஒழுக்கம் உடைமை' என உரைக்கிறார். ஒருவன் இடையறாது நல்லொழுக்கத்

தில் நின்று பழகி, கனவினும் மனமொழி மெய்களில் தீய என்பவை அணுகாதபடி காத்துக் கொள்ள வேண்டும் என்பது அவர் கருத்து.

ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

என்றமை கருதத்தக்கது. நல்ல நினைவும், சொல்லும், செயலும் வாழ்க்கை நெறியாக, இயல்பாக அமைந்த பண்பாகச் செறிந்து நிறையவேண்டும் என்பது அவரது விருப்பம்.

ஒழுக்கம் தனிப்பட்டது என்றும், தனக்குச் சார்பாக உள்ள இனத்தைப் பற்றியது என்றும் இருவகைப்படும். தன்னைப் பற்றிய பொறுப்பிற்கும், தன்னைத் தலைவனாகக் கொண்டுள்ள மக்கட் குழுவைப் பற்றிய பொறுப்பிற்கும் வேறுபாடு உண்டு.

எல்லாவற்றிற்கும் அடிப்படையாகத் திருவள்ளுவர் கூறும் உண்மை,

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். (138)

நல்ல நினைவு சொற்செயல்கள் அறத்திற்குக் காரணமாய் நின்று, என்றும் இன்பத்தைப் பயக்கும்; அவற்றுக்கு மாறாகத் தீய நினைவு சொற்செயல்கள் பாவத்திற்குக் காரணமாய் நின்று, எஞ்ஞான்றும் துன்பத்தைக் கொடுக்கும் என்பது பாட்டின் பொருள்.

இன்பம் எவ்வாற்றால் வரினும் இன்பம் எனக்கொள்ளலாகாது; ஒழுக்கத்தின் வழிவந்தால் தான் இன்பம் என்பது திருவள்ளுவரின் ஆழ்ந்த முடிவு.

அதே போன்று பொருளையும் எவ்வாற்றால் வரினும் பொருளெனக் கொள்ளலாகாது எனக் கூறுகிறார்;

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்,
சலத்தால் பொருள் செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று;

வஞ்சனை வழியால் பொருளைச் சேர்த்துக் காப்பாற்றுதல், பச்சை மண்கலத்துள் நீரை நிரப்பிக் காப்பாற்றி வைத்தாற் போன்றது.

133043
600 008.

அழக்கொண்ட எல்லாம் அழப்போம்; இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை

6-6-8
N89

பிறரை வருத்திப் பெற்ற பொருள், பெற்றவனை வருந்தச் செய்து போய்விடும்; நல்லவழியில் வந்த பொருளை இழக்க நேர்ந்தாலும் பின் நன்மையினையே தரும் என்றாற் போன்ற குறட்பாக்கள் நினைவிற் கொள்ளத்தக்கவை; உலகம் உய்ய வழிகாட்டியவை என்றும் நினைவில் இருப்பவை.

முதன்முதலாக, மண்ணிலே பிறந்த மக்கள் அனைவரும் சமம்; அந்தச் சமத்துவம் நாடுகளுக்கப்பாற்பட்டது, கடல்களுக்கப்பாற் பட்டது, இனத்திற்கப்பாற்பட்டது, சமயங்களுக்கப்பாற்பட்டது என்று அறுதியிட்டுக் கூறிய ஒரு சிறந்த ஆசான் திருவள்ளுவர்.

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்''

என்கிறது திருக்குறள்.

அந்தக் கருத்துத் தான் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிக்கோலாக விளங்குகிறது. 14-வது பிரிவில் சமத்துவம் அடிப் படையாக அமைக்கப்பட்டிருக்கிறது.

The State shall not deny to any person equality before the law or the equal protection of the laws within the territory of India.

குற்றம் புரிதலைப் பற்றி வள்ளுவர் கூறும் பாங்கு மிகச் சிறந்த தொன்று. மனித இயல்பை மிக அழகாகப் படமாக்கித் தருகிறார் வள்ளுவர்.

மனிதன் ஏன் குற்றம் இழைக்க வேண்டும்? குற்றம் புரியாமல் வாழ முடியாதா? மனித இயல்புக்கும் குற்றத்திற்கும் உள்ள

தொடர்பு என்ன? மனித இயல்பு இப்படி இருக்கிறதே என்று குற்றத்தை அனுமதித்து விட முடியுமா? இது போன்ற வினாக்களை வள்ளுவர் பலமுறை கேட்டுக் கொண்டவர்; விடை கண்டவர்.

மனித இனம் செம்மையாக வாழ வேண்டும் என்னும் அடிப்படையில் நல்ல நெறிமுறைகளை நிலை நிறுத்தி இன்றும் வாழ வைத்துக் கொண்டு வருகிறது. குறள் நல் வாழ்விற்குத்தான் ஒழுங்கு முறைகள் என்று சொன்னால் மனித இதயம்—அந்த இதயத்திலே தோன்றும் உணர்ச்சிகள்—அவ்வுணர்ச்சிகளைச் சுற்றி யுள்ள சூழ்நிலைகள்—இவற்றின் அடிப்படையில் நியாயத்தையும் நீதியையும் முடிவு செய்வதா? அன்றேல் இவற்றையெல்லாம் உதறிவிட்டு அறத்தை மட்டும் சிந்திப்பதா?

குற்றவாளிகளும் மனிதர்கள் தான். அவர்களுக்கும் உள்ளம் உண்டு. வேண்டுமென்றே யாரும் குற்றம் செய்வதில்லை. அல்லது குற்றம் செய்வதே அவர்கள் பிறவிக் குணமில்லை. இப்படிப் பல்வேறு கோணங்களில் திருக்குறளை அணுகினால் வள்ளுவரின் மேதக்க திறமை புலனாகும். தவிர்க்க முடியாத சூழ்நிலை, தேவையின் அடிப்படை, தேவையை நிறைவு செய்து கொள்ளத் திறன் இல்லாத போதும் மனிதன் குறுக்கு வழியைத் தேடுகிறான். குற்றம் செய்ய வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்படுகிறான். குற்றம் செய்வது மனித இயல்பு.

ஏதாவது ஒரு தீய செயலைச் செய்யப் புகுமுன் உள்ளத்தில் ஒருவகைப் போராட்டம் எழுந்து விடுகிறது. இழி தொழிலைச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை. இதனைச் செய்து தான் ஆக வேண்டும் என்ற கட்டாயத் தேவை நிலை. தீமைக்குத் தூண்டுகிற ஆதரவான உணர்ச்சி ஒரு பக்கம்—இது குற்றம் ஆகையால் உயிர் போவதாயினும் செய்யக் கூடாது என்று மறுத்துரைக்கும் நல்லு ணர்ச்சி ஒரு பக்கம்—இவ்வாறு இரு வேறுபட்ட உணர்ச்சிப் போராட்டத்திலே மனிதன் தன்னைப் பறிகொடுத்து விடுகிறான் என்பதை வள்ளுவர் நன்கு கண்டிருக்கிறார். தீமையின் கவர்ச்சியிலே மிக எளிதாக ஈடுபட்டுவிடும் மனித இயல்பை வென்று அறவழியில் நிறுத்திக்கொள்ள மனிதனால் முடியும் என்பது அவரது ஆழமான நம்பிக்கை.

ஒரு சிறு கதை: ஒருவன் தாங்கமுடியாத வறுமை காரணமாகத் திருடிவிட்டு அகப்பட்டுக்கொள்கிறான். காவலர்களிடம் ஒப்படைக்கப் படுகிறான். காவலர் அவனைத் திருடலாமா என்று அடிக்கிறார்கள். அப்பொழுது எழுகிறது ஒரு கேள்வி "திருடலாமா?" என்று வதைக் கிறார்களே தவிர ஏன் திருடினாய் என்று யாரும் அவனைக் கேட்க மறந்து விட்டார்கள்! வள்ளுவர் இந்தக் கேள்விக்கு மறுமொழி கூறுகிறார்.

"என்னுடைய தாய் பசியால் துடிக்கிறாளே, என் குடும்பம் வறுமையில் உழல்கிறதே, என் கண்களால் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லையே. திருடியோ ஏமாற்றியோதான் பிழைக்க வேண்டியிருக்கிறது" என்று கூறுவன அவர் காதில் விழுகின்றன. இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் கோணல் வழியைத் தேர்ந்தெடுப்பது மனித இயல்பு தானே! குற்றவாளியின் விடையிலிருந்தே குறள் எழுகிறது. ஆனால் குற்றவாளியின் நிலைக்கு இரங்கினாலும் அந்த இரக்கம் குற்றத்தை அனுமதிக்கும் அளவிற்கு வளர்ந்து விடவில்லை.

> ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் செய்யற்க
> சான்றோர் பழிக்கும் வினை.
> ---656. வினைத்தூய்மை.

> இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
> நடுக்கற்ற நற்காட்சி யவர். ---654. வினைத்தூய்மை.

"பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்" என்பது போல ஒன்றன்பின் ஒன்றாகத் துன்பமும் தொல்லைகளும், வந்து கொண்டே இருக்கின்றனவே என் செய்வேன்" என்று ஒருவன் கூறுவது அவருக்குக் கேட்கிறது.

> அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
> இடுக்கண் இடுக்கட் படும்.
> ---625. இடுக்கண் அழியாமை.

துன்பத்தைக் கண்டு அஞ்சுகிற கோழை வாழத் தெம்பற்றுப் போய் விடுகிறான், உறுதியுடையவனைக் கண்டு துன்பம் புறங்காட்டி ஓடுகிறது.

தேவையாலும் சூழ்நிலையாலும் குற்றம் செய்யக்கூடிய முறையில் மாந்தர் இயல்பு அமைந்து விட்டாலும் அதனை வென்று தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் உறுதியும் மனிதனிடம் இயல்பாகவே அமைந்திருக்கிறது என்பதை நினைவூட்டுகிறார்.

இந்த ஒரு முறை மட்டும் பாவம் செய்கிறேன். இதனைச் செய்தால் எத்துணையோ கோடி ரூபாய் கிடைக்கும் என்று சொல்லுகிறவனுக்கு......

பழிமலைந் தெய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை. ---657

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். ---954. குடிமை.

என்ற குறள்கள் மூலம் மறுமொழியளிக்கிறார்.

''குற்றங்கள் ஏதும் நான் செய்யவில்லை. பிச்சை எடுத்தாவது பிழைத்துக் கொள்கிறேன்'' என்று கூறுபவன் சொற்கள் அவர் காதில் விழாமல் இல்லை. அது மிக இழிவானது, மனிதன் மனிதனாக வாழ முடியாது. உனக்கு மட்டுமல்ல, எந்த நிலையிலும் பிச்சை எடுக்காதே. உழைக்க உறுதியிருந்தால் நலமிருக்கிறது, வளம் கிடைக்கும், உயிர் வாழலாம். இல்லையே என்று சோம்பி இருக்க வேண்டாம் என்று வழியும் காட்டுகிறார்.

நீதி வழங்குகின்ற தன்மையைப் பற்றி வள்ளுவரைப் போல் சிறந்த முறையிலே, உலகம் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் யாரும் சொல்லியிருக்க முடியாது. 'செங்கோன்மை' என்கின்ற அதிகாரத்தில், வள்ளுவர் கூறுகின்றார்; நடுவு நிலைமையோடு நீதி செலுத்துதல் வேண்டும் என்பதை அவர் சொல்கின்ற பாங்குதான் என்ன!

'ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை'

யார் மாட்டும் விருப்பு, வெறுப்பின்றி நீதி செலுத்துதல் வேண்டும். கண்ணோட்டம்-அன்பினர் மேல் கண்ணோட்டுதல் என்று பொருள். நீதி செலுத்துதலை 'இறைபுரிதல்' என்கிறார் வள்ளுவர். அந்த

இறை, தேர்ந்து, ஒர்ந்து செய்வதுதான் முறை. இந்தக் கருத்தை, திருக்குர்ஆனும் சொல்கிறது;

"O ye who believe!
Be ye staunch in justice,
Witnesses for Allah,
even though it be against
yourselves, or (your) parents,
or (your kindred), whether (the
case be of) a rich man or poor man,
for Allah is nearer unto both (than ye are)..."

அதே போன்று பைபிளும் சொல்கிறது:

"A divine sentence is in the lips of the king;
his mouth transgresseth not in judgment".

இப்பெரும் சமய நூல்கள் மட்டுமல்ல; நீதிக்கு இலக்கணம் வகுக்கும் பொழுது ஜோசப் அடிசன் என்கின்ற மேலை நாட்டு மேதை கூறுகின்றார்: நீதி ஒருதலை சார்பற்றது; நட்பைப் பாராது; சுற்றம் பாராது; ஆகவே தான், நீதி தேவதையின் கண்கள் இருட்டாக்கப் பட்டிருக்கின்றன.

"Justice discards party,
friendship, and kindred,
and is therefore
represented as blind".

—Joseph Addison,

தண்டனை வழங்குவதில் மூன்று குறிக்கோள்கள் உள்ளன. பழிக்குப்பழி என்பது ஒரு குறிக்கோள். இதன்படி கொலைக்குக் கொலை, பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண் என்ற தண்டனை முறை இருக்க வேண்டும் என்பது ஒரு வாதம். அடுத்து, குற்றம் செய்தவர் மீண்டும் அக்குற்றத்தைச் செய்யாதவாறு அக்குற்றத்திற்கு ஏற்றவாறு தண்டிப்பது. இந்த முறையை அழகுபடக் குறள் கூறுகின்றது.

''தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து''

மூன்றாவது குற்றம் செய்தவன் மனம் திருந்தும் வண்ணம் தண்டனை அளித்தல். மூன்றிலும் (பழிக்குப் பழி) தண்டனைமுறை தவறானது; இக்கட்டானது; பண்புக்கும் ஒவ்வாதது. ஒரு நகைச் சுவையான மேற்கோள் இதை விளக்கும்.

பழங்கால ரோமில் குற்றத்தின் விளைவாக ஒருவன் எதை இழக்கின்றானோ அதே பொருளை இழந்தவனுக்குத் திருப்பித்தருவது என்ற சட்டம் இருந்தது. தங்கமோதிரம் திருடப்பட்டால், திருடியவன் அதே மோதிரத்தையோ அல்லது அதே மாதிரி இன்னொரு மோதிரத்தையோ திருப்பித் தரவேண்டுமென்று சட்டம் கூறிற்று.

ரோம் நாட்டில் ஒரு நீதிபதியின் முன் ஒரு சுவையான குற்ற வழக்கு வந்தது. கழுதையொன்று சூல்கொண்டிருந்த ஒரு பெண்ணின் வயிற்றின் மேல் உதைத்தது. கர்ப்பம் கலைந்துவிட்டது. பெண்ணின் கணவன் நீதி வேண்டி நீதிமன்றத்திடம் முறையிட்டான். கழுதையின் சொந்தக்காரன் குற்றவாளியாக நிறுத்தப்பட்டான். நீதிமன்றத்தில் ரோம் நாட்டில் அன்று வழங்கிய சட்டப்படி கர்ப்பம் கலைந்த நங்கைக்கு மீண்டும் கர்ப்பம் உண்டாக்க வேண்டும். உண்டாக்குவது யார்? நங்கையின் கணவனா? கழுதையின் சொந்தக்காரனா? நீதிபதி மயங்கிய நிலையில் சட்டத்தைக் கடிந்து கொண்டார்.

எல்லா நாடுகளும் மற்ற இரண்டு முறைகளையும் சேர்ந்து ஏற்றுக்கொண்டுள்ளன. குற்றம் செய்தவன் மீண்டும் அக்குற்றம் செய்யாதிருக்கும் வகையில் தகுந்த தண்டனை தரப்படல் வேண்டும். இயன்ற வரையிலும் அவன் திருந்துவதற்கேற்ற வழிவகைகளையும் செய்ய வேண்டும். குறள் இந்த இரண்டு முறைகளையும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே நாட்டை ஆள்வோர் ஏற்றுக் கொள்ளும்படி கூறியிருக்கின்றது.

''கடுமொழியும், கையிகந்த தண்டமும் வேந்தன்,
அடுமுரண் தேய்க்கும் அரம்''

குற்றத்தின் அளவுக்கு மீறிய தண்டனை தரக்கூடாது நீதிபதி. மற்றும் தனது தீர்ப்பிலே பயன்படுத்தும் கடுஞ்சொல்லையும் தவிர்க்க வேண்டும், அளிக்கும் தண்டனை குற்றத்திற்கு ஏற்றவாறு இருந்தாலும் தண்டனை, குற்றம்செய்தவனை என்றுமே குற்றவாளி என்கின்ற நிலைக்கு ஆளாக்கி விடக்கூடாது. தண்டனையை அனுபவிக்கும் காலத்து, அவன் திருந்துவதற்கேற்ற வழிவகை களைக்காட்டி நல்ல மனிதனாக்கும் அடிப்படையில் அமைய வேண்டும். உலக சட்டவல்லுநர்களில் முன்னோடியான நம் திருவள்ளுவர் இதை நினைத்தே,

''கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்''

என்று அறிவுரை புகல்கின்றார். குறள் காட்டும் நீதிமுறை மேம் பட்டது; மனித நாகரீக வாழ்வின் முன்னோடி; பண்பாடமைந்த சமுதாயத்துக்கு ஏற்றது.

பண்போடு வாழ்வதற்கு வழிசொல்கின்றார் வள்ளுவர். ஏனெனில், பண்பற்ற மனிதர் மரமேயாவர்.

''அறிவினால் ஆகுவ(து) உண்டோ? பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை''

என்று தெளிவாகக் கூறுகிறார்.

யார் ஒருவர் மற்றவர்களின் பிணியைத் தன் பிணியாக ஏற்றுக் கொள்கின்றார்களோ, மற்றவர்களின் இன்னல்களைத் தன் இன்னல் களாகத் தாங்கிக் கொள்கின்றார்களோ, அப்படி ஏற்று, உணர்ந்து அவர்களைக் காப்பாற்றுகின்றார்களோ அவர்களே, மனிதர்கள், பண்புடையாளர்கள்.

அத்தகைய மனிதப் பண்பு இல்லாத கூர்த்தமதியினரை 'மரம் போன்றவர்' என்கிறார் வள்ளுவர். இங்கே அவர் 'மரம்' என்று கூறுவது உயிருள்ள மரமன்று. உலர்ந்துபோன மரத்தை—மரக் கட்டையைக் குறிக்கின்றது. ஓரறிவுடைய மரம், தன்னை உறுத்தி

னால் அதன் துன்ப உணர்ச்சியை ஒருவாறு வெளிப்படுத்துகிறது. ஆனால் உலர்ந்து போனமரத்துக்கு—கட்டைக்கு உணர்ச்சி அறவே இல்லையல்லவா?

இந்தக் கருத்து, அலெக்ஸாண்டர் போப் என்கின்ற ஆங்கில அறிஞரை நமக்கு நினைவூட்டுகிறது.

> "Teach me to feel another's woe,
> To hide the fault I see;
> That mercy I to others show
> That mercy show to me"

இறுதியாகக் காதலைப் பற்றி; காதலனைப் பிரிந்து தனித்து நிற்கிறாள் காதலி. இடைவிடாமல் அவனையே நினைத்துக் கொண்டிருப்பதால் காணுமிடமெல்லாம் அவன் உருவமே தெரிகிறது. அவள் தனக்குள்ளேயே கூறிக் கொள்கிறாள்:

'என்னை விட்டுத் தலைவர் பிரிந்துவிட்டதாக எண்ணித் தோழி அவரைப் பழிக்கிறாள்; அவளுக்கென்ன தெரியும்? அவர் என் கண்ணுக்குள்ளேயே தங்கியிருக்கிறார். நான் என் கண் இமைகளை இமைத்தால், அந்தோ! அது அவரை உறுத்துமே! ஆனால் அவர் அந்த உறுத்தலையும் பொருட்படுத்தாது மற்றவர் காணாதவாறு கண்ணுக்குள்ளேயே இருக்கிறார்! இது எனக்கு மட்டும் தானே தெரியும், அந்த நுட்பமான காதலரைப் பற்றி!

> ''கண்ணுள்ளிற் போகார் இமைப்பின் பருவரார்
> நுண்ணியர்எம் காத லவர்''

காதலி சில நாட்களாகக் கண்களுக்கு மைதீட்டிக் கொள்வதில்லை. அதன் காரணம் தெரியாமல் தவிக்கிறாள் தோழி. அதை அறிந்த தலைமகள்,

'தோழி நான் கண்களுக்கு ஏன் மைதீட்டிக் கொள்வதில்லை தெரியுமா? மைதீட்டிக் கொண்டால், ஒருவேளை அந்த மை என் கண்களில் வாழும் என் காதலரை மறைத்து விடுமே! அல்லது, அந்த மையுள்ளே மறைந்து கொள்வாரே! அதனால்தான்' என்று கூறு கிறாளாம்.

> ''கண்உள்ளார் காத லவர்ஆகக் கண்ணும்
> எழுதேம் கரப்பாக்(கு) அறிந்து''

இது போன்று மிகப் பண்பட காதலின் திறனை வெளிப்படுத்தத் திருவள்ளுவர் ஒருவரால்தான் முடியும். இவ்வாறு உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இன்பத்தையும், நெஞ்சில் என்றும் நிலை பெற்று, நினைக்க நினைக்க இனித்துக் கொண்டிருக்கும் நயம்மிக்க கருத்துக்களையும், தம் இனிய குறட்பாக்களில் பெய்துவைத்துள்ளது திருக்குறள். மக்களினத்தை உயர்வு பெறவைத்த வள்ளுவப் பெருந்தகையை என்றென்றும் போற்றுவோம்.

கடைசியாகக் கடையனார் வாயிலாக அவருக்குப் புகழுரை சொல்லுதல் சாலவும் பொருந்தும்.

> ''சிந்தைக்(கு) இனிய, செவிக்(கு) இனிய வாய்க்(கு) இனிய;
> வந்த இருவினைக்கு மாமருந்து---முந்திய
>
> நல்நெறி நாம் அறிய நாப்புலமை வள்ளுவனார்
> பண்ணிய இன்குறள் வெண்பா''
>
> ---கடையனார்.

நீதிபதி அமரர் மகாராஜன் அவர்கள் சொல்கின்றார்கள்.

''Not only does Valluvar see life unrole in a continuous whole but also does he see with the eyes of a Seer what impedes the further evolution of man and how the impediments can be removed. He has eyes that miss nothing, eyes that can twinkle with humour and wit, Sarcasm and mischief, eyes which glow with righteous indignation and sparkle with serene and lofty wisdom, eyes which can make men fidget and

women blush, eyes, which grow misty with tears for the poor, and sting the wicked.''

Above all, his colossal and loving inquisitiveness gives him a vision that refuses to recognise the trivialities of caste community or nation. His is a cosmopolitanism, which he shared with another Tamil Poet Ponkundranar, who was probably co-eval in time with Thiruvalluvar and who showed similar catholicity by proclaiming :

Every country is my native land and every man my Kinsman. In the great republic of letters, Valluvar had few equals, rightly did G. U. Pope hail him as 'The Bard of Universal Man'.

நான் இதுவரை சொன்ன, எடுத்துக்காட்டிய எடுத்துக்காட்டுகள் எல்லாம் திருக்குறள் ஒரு உலக இலக்கியம் என்பதை எடுத்து இயம்பத்தான்—சில குறள்களே போதும். முழுமையும் பார்க்கத் தேவையும் இல்லை. அந்தத் தேனின் தீஞ்சுவை முழுதும் பருகித் தான் ஆக வேண்டும் என்பதில்லை. சில துளிகளே போதும்.

வாழ்க வள்ளுவர் கண்ட உலக நெறி!

---

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
சென்னை-600 008.